## பொது இடத்தில் வியாபாரம்

# 7 அங்காடி வியாபாரிகள் மீது நடவடிக்கை

### பொருட்கள் பறிமுதல்

**கோலாலம்பூர், ஆக. 3-**

**அனுமதியின்றி பொது இடத்தில் வியாபாரம் செய்த 4 அந்நியர்கள் உட்பட 9 அங்காடி வியாபாரிகள் மீது கோலாலம்பூர் மாநகர் மன்றம் நடவடிக்கை எடுத்தது.**

அங்காடி வியாபாரிகள் மீதும் கார் கழுவும் இடங்கள் மீதும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் தனது முகநூலில் வெளியிட்ட அறிக்கையில் கூறியது.

நான்கு அந்நியர்கள் உட்பட 9 அங்காடி வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அந்த அறிக்கை விவரித்தது. நடப்புச் சட்டவிதிகளின் கீழ் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அது கூறியது.

இவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் ஜாலான் லொம்போங், தாமான் மிகார்ஜா செராசில்



உள்ள கிடங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டன. பொதுமக்கள் பொது இடங்களில் சட்டவிரோத வியாபாரம் நடைபெறுவதற்கு எதிராகத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கோலாலம்பூர் மாநகர் மன்றம் எச்சரித்தது.